மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள் அரசினுடைய ஆணையை ஈடேற்றத் தவறினால் கட்டாயமாக அவர்கள் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். ஏதாவது, எங்காவது தவறு நடந்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-40.)

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பல ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். அரசு ஆசிரியர்களுக்குண்டான வசதி வாய்ப்புகள் அவர்களுக்குச் சரியான முறையில் தரப்படவில்லை என்றும், அரசு தருகின்ற சலுகைகள் அனைத்தும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் அத்தகைய குறைபாடுகள் தனியார் பள்ளிகளில் இருக்கின்றன என்ற கருத்தையும் நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், அந்தப் பகுதியின் பெற்றோர் என்ற முறையிலும் நான் அரசுக்குத் தெரிவித்திருந்தேன். அதன் பேரில் இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கிறதா அல்லது அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பள்ளியை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்ற தகவல் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அதை தற்போது ஒரு மனுவாகக் கொடுக்கும்படி வேண்டுகிறேன். அரசு கட்டாயம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வேதாரண்யத்தில் முன்சீப், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள்.

107—(*வினா எண் 9512) திரு. மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் தாலுகா தலைமையிடத்தில் முன்சீப், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை, (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1986 நவம்பர் 20]

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருத்துறைப்பூண்டியிலிருந்து அந்த இரண்டு கோர்ட்டுகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேதாரண்யம் பகுதியிலிருந்து வழக்குகள் திருத்துறைப்பூண்டிக்குச் செல்வதால் அந்த வழக்கு மன்றங்களை விரைவிலே வேதாரண்யத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில் வேதாரண்யம், நாகப்பட்டினம் ஜூரிஸ்டிக்ஷனில் இருக்கிறது. அதைப் போலவே செகன்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டைப் பொறுத்த வரையில் திருத்துறைப்பூண்டி எல்லைக்குட்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வேதாரண்யம் பகுதிக்கு வேண்டுமென்று கேட்கிறார். அரசு ஒரு கொள்கை முடிவை எடுத்திருக்கிறது. ஒவ்வொரு வட்டப் பகுதிக்கும் ஒரு உரிமையியல் நீதிமன்றம், சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் தர வேண்டுமென்ற நோக்கை அரசு நடைமுறைப்படுத்தவிருக்கிறது. அந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறபோது இந்தக் கோரிக்கை நிறைவேறும்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, வேதாரண்யம் வட்டத் தலைநகரமாக இருக்கிறது. வாரம் ஒரு முறை கேம்ப் கோர்ட் அங்கே நடக்கிறது. நிரந்தரமான கோர்ட்டாக அமைந்தால் மக்களுக்கு நலமாக இருக்கும். ஆகவே அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் முன்னரே சொன்னேன். ஒவ்வொரு வட்டத்திற்கும் நீதிமன்றம் வர வேண்டுமென்ற முறையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக நிலக்கோட்டை தாலுக்காவில் வத்தலகுண்டில் ஒரு முன்சிபல் கோர்ட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டபோது 1985 ஆம் ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலேயே வாக்குறுதியை அளித்தார்கள். An assurance was given by the Hon' ble Minister in the past Assembly. அது எந்த நிலைமையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை அரசுக்கு இல்லை என்ற போதிலும் மாண்புமிகு உறுப்

பினருடைய கோரிக்கையை ஈடேற்ற வேண்டுமென்ற வகையில் அதன் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நிதித் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

பீளமேடு வ.உ.சி. கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்.

108—(*வினா எண் 8089) திரு. கு. ரமணி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம் பீளமேட்டில் உள்ள வ. உ. சி. கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் டைரக்டர் போர்டு பல ஆண்டுகளாகக் கூட்டப்படாமல் செயலற்று கிடப்பது பற்றி உறுப்பினர்கள் 7-4-1983 முதல் 9-12-1985 வரையில் பல புகார் மனுக்கள் அனுப்பியும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): புகார் மனுக்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சொசைட்டி இருபது வருஷங்களுக்கு மேலாக முறையாக இயங்கிக் கொண்டு வந்தது. அதனுடைய பிரசிடெண்டாக இருக்கிறவர் இன்சால்வெண்ட் பெட்டிஷனைக் கோர்ட்டில் கொடுத்தவர். அன்றைக்கே அவருடைய பதவி காலியாக வேண்டியது. அதற்குப் பிறகு சட்டப்படி அவருடைய பதவி செல்லாது. அவர் அப்படி போகாமல், கடைசியாக டெபுட்டி ரிஜிஸ்ட்ரார் ஆஃப் ஹவுசிங்கினுடைய கோர்ட்டில் கேஸ் ஃபைல் பண்ணி அவர் டைரக்டர் பதவியில் இருக்கக் கூடாது என்ற தீர்ப்பும், மெம்பராக இருக்கக்கூடாது என்ற தீர்ப்பும் வழங்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கும் அவர் அந்த நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள தனி அதிகாரியிடம் பொறுப்பை ஒப்படைக்காமல் இருந்து வரும் அக்கிரமம் நடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு அந்த சொசைட்டியினுடைய ஜெனரல் பாடி கூட்டத்தைக் கூட்டி, புதிய போர்டைத் தேர்ந்தெடுத்து நிர்வாகத்தை அவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.